[1982 மார்ச் 5

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு வைப்பு நிதி என்ற பிரச்னை நீண்டகாலப் பிரச்னையாக இருந்து 1977 ஆம் ஆண்டில் அதற்குத் தீர்வு ஏற்பட்டவுடன் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தடை பெற்றிருந்தாலும் நம்முடைய மாநில அரசு எத்தனை முறை முதலாளிகளை அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது ? சில முதலாளிகள் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண விரும்புவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அவர்களையும், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களையும் கலந்து பேசி தடையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உயர்நீதிமன்றமும், டெல்லியிலே உள்ள உச்ச நீதிமன்றம் தடை விதித்திருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தடை உத்தரவை வாங்கிய முதலாளிகளே கொடுக்க முன்வருகிறார்கள் என்றால் இந்த அரசை விட மகிழ்ச்சியடையக் கூடிய அரசு வேறொன்றும் இருக்க முடியாது. இருந்தாலும் அப்படியொரு (consenses) இருக்கிறதா என்று இந்த அரசு பரிசிலனை செய்யும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண் 372—திரு. சு. பாலன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது பெரம்பூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களுக்கு அந்த இடத்தைச் சொந்தமாக்கி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

(அ) ஆம் எனில் அந்த நிலம் அவர்களுக்கு இனாமாக கொடுக்கப் படுகிறதா அல்லது கிரயத்திற்கு கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அரசு நிர்ணயித்துள்ள நிலத்தின் மதிப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொண்ட பிறகே பட்டா வழங்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1982 மார்ச் 5]

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரம்பூர் தொகுதியில் உள்ள சில பகுதிகளில் குடியிருக்கின்ற அந்தக் குடியிருப்பாளர்கள் சுமார் இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே அந்த இடத்திற்கு வந்து தொடர்ந்து குடியிருந்து வருவதாகவும், அவர்கள் பக்கத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது அவர்களிடத்திலேயிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு பட்டா கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்குத் தவணை மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டு பட்டா வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தவணை முறையிலேதான் பத்தாண்டுக் காலம் வரையில் நீடிக்கப்பட்ட தவணை முறையில்தான் அந்தப் பணம் பெறப்படுகிறது.

போடிக்கு வரும் குடிநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்குத் தடுக்கும் திட்டம்.

* **வினா எண் 373.—திரு. கே. எம். எஸ் சுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிக்குவரும் குடிநீரை குடிநீர் தேக்கத்திற்கு மேல் விவசாயிகள் பிரித்து எடுத்து விவசாயம் செய்வது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படி விவசாயம் செய்ய தண்ணீரை எடுக்கும் நபர்கள் மேல் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். கோட்டாக்குடி ஆற்றிலிருந்து ஒரு சில பட்டதாரிகள் நீர் எடுத்து விவசாயத்திற்குப் பயன படுத்தியுள்ளார்கள்.

(ஆ) அவர்கள் மீது 6 நீர் தண்டத் தீர்வை போடப்பட்டுள்ளது.